Saint Jane Frances de Chantal

Dec 12



# *புனித ஜேன் பிரான்செஸ் தெ ஷாந்தால் (1572 – 1641)*

இவள் பிரான்ஸ் நாட்டில் உள்ள திஜோன் நகரில் 1572-ஆம் ஆண்டு பிறந்தாள். இவளுடைய தாய் சிறுமியாக இருக்கும் போது இறந்து விட்டாள். இவளுடைய தந்தை மிக்க கவனத்துடன் இவளுக்கு கல்விப் பயிற்சியளித்தார். இவள் உறுதிபூசுதல் பெறும் பொழுது பிரான்செஸ் என்னும் பெயரை தன் ஞானஸ்நானப் பெயருடன் சேர்த்துக் கொண்டாள். 20-ஆம் வயதில் ஒரு பிரபுவை மணமுடித்தாள். அவர் இராணுவத்தில் உயர்ந்த வேலை பார்த்தார். இருவரும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தார்கள். 1602-ஆம் ஆண்டு ஒரு நாள் கணவர் வேட்டைக்குச் சென்ற போது ஒருவர் இவரை கொல்ல தன் மனைவியின் கரங்களில் உயிர் விட்டார். அப்பொழுது இவளுக்கு வயது 28. ஒரு மகனும் மூன்று பெண் மக்களும் இருந்தார்கள். இவள் கடவுளுக்கும் பக்தி முயற்சிகளுக்கும் தன்னைக் கையளித்தார்.

1604-ஆம் ஆண்டில் இவள் முதல் முறையாக புனித பிரான்சிஸ் சலேசியாரைச் சந்தித்தாள். உலகத்தைத் துறக்கும்படி இவளுக்கு அவர் ஆலோசனை கூறினார். தன் பிள்ளைகளுக்கு வேண்டிய காரியங்களைச் செய்து விட்டு இவள் துறவியானாள். அப்பொழுது இவளுடைய மகனுக்கு வயது பதினைந்து. 1610-ஆம் ஆண்டில் இவள் ஒரு புதிய கன்னியர் சபையைத் தொடங்கி ஏராளமான பேர் அந்த சபையில் சேர்ந்தார்கள். இவள் உயிரோடிருக்கும் பொழுதே அச்சபையில் எண்பத்தாறு மடங்கள் இருந்தன. இவளுக்கு துன்பங்கள் ஏராளமாக வந்தன. இரண்டு மக்களும் அன்புச் சகோதரி ஒருத்தியும் இருந்தார்கள். கணவர் இறந்த தொடக்கத்தில் திரும்ப மணமுடிக்கும்படி நண்பர்கள் இவளை வற்புறுத்தினார்கள். இவள் துறவியாகும்படி தன் மகனைத் தாண்டி வர வேண்டியிருந்தது. பிள்ளைகளையும் வயதான தந்தையையும் விட்டுப் பிரியும் போது தாங்கள் முடியாத துயரப்பட்ட இவளுக்கு பக்கபலமாக இருந்த புனித சலேசியாரும் இறந்த கவலை அநேக ஆண்டுகளாக இவளை வாட்டியது. உள்ளத்தில் வறட்சி, இவை அனைத்தையும் இவள் தேவசித்தத்திற்குப் பணிந்து சகித்து வந்தாள். அனைத்திலும் இவள் இறைவனது சித்தத்தைத் தேடினாள். தன் சபைக் கன்னியருக்குப் பின்வரும் புத்திமதியைச் சொல்வாள். “ஆண்டவராகிய இயேசுவே, உமது விருப்பப்படியே ஆகட்டும்” என்று சொல்லுங்கள். அவருக்கு எவ்வித நிபந்தனையும் விதிக்கக்கூடாது. தந்தையானாலும் சரி, பிள்ளையானாலும் சரி, எனக்கானாலும் சரி, வேறு எதற்கானாலும் சரி நான் கடவுளுக்கு நிபந்தனை விதிக்க மாட்டேன்.

புனித சலேசியார் இறந்த பிறகு இருபது ஆண்டுகளாய் வாழ்ந்து 13.12.1641-ல் இறந்தாள்.

**சிந்தனை:**

இவள் கடவுளது குரலுக்குக் கீழ்ப்படிவதற்கு இடையூறாக இருந்த தன் மகனைத் தாண்டி சென்றாள். இவவிதம் சென்ற அவள் ஒரு கன்னியர் சபையை ஏற்படுத்தி ஏராளமான நன்மைகள் செய்தாள். கடவுளால் அழைக்கப்படுவது பெரும் பாக்கியம். இந்த உண்மைகளை நாம் உணர வேண்டும்.

**செபம்:**

ஆண்டவரே, உமது குரலுக்கு மகிழ்ச்சியுடன் கீழ்ப்படியும் வரத்தை எங்களுக்குத் தாரும்.